**DEPOSITION OF WITNESS**

---

**MCOP. No.** 6674/2025 **DATE: 15.04.2026**

Deposition of Witness : P.W.1

Name : Mrs.Sangeetha

Husband Name : Mr.Dharmakannu

Age :

Address :

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 15th day of April 2026.

-----------------------------------------------------------------------------------------------

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் மனுவின் முதல் மனுதாரர். நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எங்கள் மனுவிற்கு ஆதரவாக 28 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அது மசாஆ 1 முதல் 28 ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தினை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து சமயத்தில் நான் ஓசூரில் இருந்தேன். என் கணவர் கடலூரில் இருந்தார். இந்த விபத்தானது என் கணவரது அஜாக்கிரதை காரணமாக ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் விபத்து சம்மந்தப்பட்ட இடத்தின் வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவர் கடலூரில் Tagros chemicals India Pvt. Ltd. என்ற நிறுவனத்தில் வேலை பார்த்தார். என் கணவருடைய ஊதியம் அவரது வங்கிக் கணக்கில் தான் வரும். நான் சொல்லும் அவரது வருமானம் உண்மையா இருக்கும் பட்டத்தில் அவரது வங்கிக் கணக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அவரது வங்கிக் கணக்கை தாக்கல் செய்தால்தான் அவருடைய உண்மையான வருமானம் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. 2019-2020 வருடத்திற்குரிய வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அது அவர்

இறந்த பின்னா் தாக்கல் செய்யப்பட்ட கணக்கு என்றும் சொன்னால் நான் வருமான வாி கணக்கு தாக்கல் செய்யவில்லை. என் கணவா் வேலை பாா்த்த நிறுவனத்தின் அதிகாாியை விசாாித்தால் தான் அவரது உண்மையான வருமானம் என்னவென்று தொியவரும் என்றால் சாியல்ல. மசாஆ 21 என் மகனது உடல் ஊனச் சான்றிதழ் ஏன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவருக்கு பிறவியிலேயே உடல் ஊனம் என்று காட்ட தாக்கல் செய்துள்ளேன். என் மகனுக்கு என்ன ஊனம் என்று கேட்டால் மூளை சம்மந்தப்பட்ட வியாதி காரணமாக கால் ஊனமாகிவிட்டது. அவருக்கு Intellectual disability 80 சதவீதம் என்று காட்டப்பட்டுள்ளது. அவ்வாறான குறைபாடுள்ள நபருக்கு புாிந்துகொள்வதில் சிரமம் ஏற்படும் என்று சொன்னால் அவனைப் பொருத்த அளவில் புாிந்துகொள்வான் ஆனால் நடக்கமுடியாது. நான் தவறாக சொல்கிறேன் என்றும் Intellectual disability இருந்தால் பையனுக்கு பாதுகாவலா் நியமனம் செய்துதான் வழக்கை நடத்தமுடியும் என்று சொன்னால் சாியல்ல. நான் இவ்வழக்கில் கேட்டுள்ள இழப்பீட்டுத் தொகை மிக அதிகம் என்று சொன்னால் சாியல்ல. என் கணவரது அஜாக்கிரதை காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளதால் 2ம் எதிா் மனுதாரா் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் இல்லை என்று சொன்னால் சாியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:15.04.2026.

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

தலைமை நீதிபதி,

சிறுவழக்குகள் நீதிமன்றம்.